அளித்து அப்பட்டப் படிப்பு முழு வசதிகளையும் பெற்று நன்கு வளர்ச்சிஅடைந்தபிறகு நிரந்தர இணைப்பு வழங்குவது பல்கலைக் கழகத்தின் நடைமுறையாகும். எனவே மேற்குறிப்பிட்ட பட்டப் படிப்புப் பாடங்களுக்கும் காலப் போக்கில் சென்னைப் பல்கலைக் கழக நிரந்தர இணைப்பு கிடைக்கும்.

(iii) கல்லூரி முதல்வர், மாணவர்கள் சங்கம் அமைப்பது தொடர்பாக முன்னரே முடிவு எடுத்து ஒரு தற்காலிக மாணவர் பிரதிநிதிக்குழு அமைக்க ஒப்புதல் அளித்துள்ளார். இந்த தற்காலிகக் குழு, மாணவர் சங்கத்தேர்தலுக்கு முன்பாக அமைக்கப் பட்ட ஒரு இடைக்கால ஏற்பாடாகும்.

3. அனைத்து பெற்றோர்கள் கூட்டம் ஒன்று நடத்தினால் நலம் என்று கருதி அக்கூட்டம் 24—2—1987 அன்று தொழில் நுட்பக் கல்வி இயக்குநரால் நடத்தப்பட்டு, விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. அதன் விளைவாக மறுநாளே மாணவர்கள் போராட்டத்தினைக் கைவிட்டார்கள். வகுப்புகள் மீண்டும் சுமுகமான முறையில் துவங்கப்பட்டு விட்டன. இப்போது கல்லூரி நன்றாக நடந்துகொண்டு வருகிறது.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDY: On behalf of the Chairman of the Public Accounts Committee, I present the following Reports :—

1. *Forty-Second Report* on the further action taken by the Government on the recommendations contained in the Eighth Report (Seventh Assembly), and its earlier reports on the Accounts of the Government of Tamil Nadu for the years 1963-64 to 1965-66 and 1969-70 to 1971-72 relating to Public Works Department and Transport Department.

2. *Forty-third Report* on the Excesses Over Voted Grants and Charged Appropriations for the year 1982-83.

(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பில் ஒன்றும் ஏற்ற வேண்டாம். பத்திரிகைகளும் வெளியே பிரசுரிக்க வேண்டாம். வேண்டுமானால் இன்னும் ஒரு நாள் விவாதத்தை வைத்துக்கொள்ளலாம்.